ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேதா₃ந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸதா₃ ஹ்ருதி₃ ॥

ஸ்ரீவண்ஶட₂கோப ஸ்ரீமந்நாராயண வேதா₃ந்த யதீந்த்₃ர
மஹாதே₃ஶிகன் அருளிச்செய்த₃

# ॥ ஸ்ரீ ஆதி₃வண்ஶட₂கோப யதீந்த்₃ர மஹாதே₃ஶிகன் அடை₃க்கலப்பத்து ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஶ்ரீ:
ஶ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ ஶ்ரீ ஆதி$_3$வண்ஶட$_3$கோப யதீந்த்$_3$ர மஹாதே$_3$ஶிகன் அடை$_3$க்கலப்பத்து ॥

லக்ஷ்மீந்ருஸிம்ஹவரஶாஸந ஶேக$_2$ரோ ய:
    தார்க்ஷ்யேண நாத$_2$முக$_2$ரேண தது$_3$த்$_3$யமே ச ।
ஆஜ்ஞப்த ஆதி$_3$ஶட$_2$கோப யதீந்த்$_3$ர க$_3$ாத$_2$ா:
    சக்ரே பராங்குஶயதீந்த்$_3$ரமஹம் தமீடே$_3$ ॥

ஒன்பதுரு நரசிங்கனுகந்துறையும் திருப்பதிகள்⋆
    அன்புடனே பணி செய்யும் அற்புதனாம் ஆசிரியன்⋆
முன்புற்ற சடகோபன் மொய்கழலை ஏத்தி எழும்⋆
    பண்புடைய பராங்குசன் தன் பாதமலர் பரவினமே

‡ஆதிமறை உருவான⋆ ஆதிப்புள் வெற்பதனில்⋆
    சோதி என உலகெல்லாம்⋆ சுகம் பெறவே வந்துதித்த⋆
ஆதிகுரு நரசிங்கன்⋆ அருளாலே யோகியான⋆
    ஆதிவண் சீர்ச் சடகோபன்⋆ அடியிணை என் முடிமணியே (1)

மணியான வார் உயிராம்⋆ மணி முத்துத் தாழ் வடத்து⋆
    மணியாகப் பெரும்பூதூர்ப்⋆ புரந்தன்னில் வந்துதித்துப்⋆
பிணி தீர்த்ததேசிகனே⋆ பின்னும் இவண் வந்தனைத்தும்⋆
    பணிய நின்ற சடகோபன்⋆ பதப் பூவை அடைந்தேனே (2)

அடைந்தென்றும் அடங்காத⋆ ஆங்கார மாமலையைத்⋆
    தடிந்திட்ட பெரியோனைத்⋆ தடுத்த திறல் இரணியனை⋆
இடந்திட்ட நரசிங்கன்⋆ இணை அடியை எப்பொழுதும்⋆
    இடங்கிட்டி உறைகின்ற⋆ இம் முனியை அறிந்தேனே (3)

அறிந்தென்றும் அவன் அருளே⋆ அம்புவியில் புகலின்றிச்⋆
    செறிந்தெங்கும் செல நின்ற⋆ செல்வம் உடை வேங்கடவன்⋆

www.prapatti.com

அறந்திகழுமாமணியின்⋆ அவதாரமாங்குருவே⋆
நிறைந்திங்கே இம் முனியாய்⋆ நிற்கின்றதுரைப்பேனே (4)

உரைத்த தன் உத்தமகுணமே⋆ உய்வதென்று தன் அருளால்⋆
கரந்தெங்கும் ஓங்கிறைவன்⋆ கலியாண குணங்களையே⋆
உரைக்கின்ற பாடியத்தை⋆ உம்பர் தொழ எப்பொழுதும்⋆
உரைக்கின்ற மாமுனியை⋆ உரைத்துரைத்தின்றுயர்ந்தேனே (5)

உயர்ந்ததென்றும் உத்தமனாய்⋆ உதவும் சீர்த் திருமாலின்⋆
பயம் தவிர்க்கு மெய்ப் பதமே⋆ பதமென்று பேசுகின்ற⋆
மயர்வில்லா மூன்றினது⋆ மாசறு சீர்ச் சாரம் எங்கும்⋆
உயர் பெறுத்துமுயோகி பதம்⋆ உற்றதலான் மற்றிலனே (6)

மற்றவனாம் தேசிகன் தன்⋆ வண் புகழின் வண்மை எண்ணிப்⋆
பற்றிலன் ஆயவன் பூண்ட⋆ பாங்குடை நற்கோசம் ஏந்தி⋆
எத்திசையும் அக்கோசம்⋆ ஏந்துகின்ற கையுடனே⋆
புத்தியுள்ளே வரும் யோகிப்⋆ பொன்னடியை மறவேனே (7)

‡மறவாதே மா நிலத்தில்⋆ வண் புகழின் வண்மை எண்ணிப்⋆
பிறவாதே பூமிதனில்⋆ பின் அனைத்தும் உய்ய எண்ணி⋆
இறையவனே புரட்டாசித்⋆ திருக் கேட்டையில் குருவாய்ப்⋆
பிறந்திட்ட சடகோபன்⋆ பொன் அருள் நான் பெற்றேனே (8)

‡பெற்ற தாயாய்ப் பத்தருக்குப்⋆ பேதம் இல்லாத் தந்தையுமாய்⋆
மற்றுமுள்ள சுற்றமுமாய்⋆ மன்னிய பொன் இராசியுமாய்⋆
எத்திசையும் என்னுடைய⋆ இன் உருவாம் பாக்கியமாய்⋆
உற்ற முனி சடகோப!⋆ உன் கழல்கள் அகலேனே (9)

‡அகலாமே மாறன் உரை⋆ அருத்தமுடன் அனைவர்க்கும்⋆
தகவாலே உரைக்கின்ற⋆ தன்மை உள்ள மாமுனியைப்⋆
புகலாலே பற்றினார்க்குப்⋆ புரக்கின்ற நரசிங்கன்⋆
தகவாலே முடி சூடித்⋆ தரித்தாரைப் பற்றினனே (10)

‡பத்தியுள்ள சீநிவாச⋆ பர யோகி தன் பதத்தில்⋆
பத்தி பெறும் யோகி எனும்⋆ பராங்குசன் தன் சீர் உரையாம்⋆

www.prapatti.com

எத்திசையும் ஏத்த நின்ற⋆ சடகோபன் அந்தாதி⋆
முத்தி தரு நரசிங்கன்⋆ முன் அருளுக்காதினமே (11)

॥ ஸ்ரீவண்ஶட₃கோப ஸ்ரீமந்நாராயண வேத₃ாந்த யதீந்த்₃ர
மஹாதே₃ஶிகன் திருவடி₃க₃ளே ஶரணம் ॥

www.prapatti.com